செ.வெ.எண். 52 நாள்: 27.02.2020

பெரம்பலூர் மாவட்டம்

# மாநில அளவில் மாவட்டங்களுக்கிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.வே.சாந்தா இ.ஆ.ப., அவர்களை சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

**அதன் விபரம் வருமாறு:**

தமிழ்நாடு பள்ளிகள் கிரிக்கெட் சங்கம் சார்பாக மாநில அளவில் மாவட்டங்களுக்கிடையே 12 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கான கிரிக்கெட் போட்டி திருவண்ணாமலை மாவட்டத்தில் நடைபெற்றது. இதில் நம் பெரம்பலூர் மாவட்ட அணி கலந்து கொண்டது. 10 மாவட்ட அணிகள் விளையாடின. இதில் பெரம்பலூர் மாவட்ட அணியும் திருவண்ணாமலை மாவட்ட அணியும் இறுதி போட்டியில் விளையாடின. இப்போட்டியில் பெரம்பலூர் மாவட்ட அணி இரண்டாம் இடம் பெற்றது.

மேலும் ஆட்ட நாயகன் விருது மு.நிருபன்கார்த்திக் மற்றும் வளரும் இளம் விளையாட்டு வீரர் விருது பிரதோஷ் ஆகியோருக்கு வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து வெற்றி பெற்ற பெரம்பலூர் மாவட்ட அணியினர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.வே.சாந்தா இ.ஆ.ப., அவர்களை (26.02.2020) அன்று சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட விளையாட்டு அலுவலர் திரு.பாபு, பெரம்பலூர் மாவட்ட பயிற்சியாளர்கள் திரு.பழனிச்சாமி, திரு.சந்தரேசன் மற்றும் உடற்பயிற்சி சிகிச்சையாளர் திரு.காளிதாஸ் ஆகியோர் உடன் இருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், பெரம்பலூர் மாவட்டம்.**